# கிறிஸ்மஸ் விழா

## கிறிஸ்மஸ் விழாவின் அர்த்தம்

கிறிஸ்மஸ் விழாவின் உள்ளார்ந்த அர்த்தங்கள் இறைவார்த்தை வழியாக வெளிப் படுகிறது. பழைய ஏற்பாட்டு காலத்திலே 500 ஆண்டுகளுக்கு முன்பாக போராட்டங்களுக்கு மத்தியிலே வாழ்ந்த மக்கள், இறைவன் தங்களை புதுமையான விதத்தில் விடுவிக்க வரமாட்டாரா? என்று ஏங்கிய சமயத்தில் தன்னையே மனிதர்களோடு முழுமையாக இணைக் கின்ற விதத்தில் இறைவன் மனுவுருவானார். எதிர்பாராத சூழ்நிலைகள் மற்றும் மக்களுக்கு மத்தியில் எல்லா மக்களின் மீட்புக்காக இறைவன் மனிதரானார். இறைவன் நம்மோடு இருக்கிறார் இவ்வுலகையும் மனிதரையும் நித்தியத்திற்கும் மாற்றுவார். "உலகம் முடியும்வரை உங்களோடு நானிருக்கிறேன்" (மத்தேயு 28:20) என்று சொன்ன இயேசுவின் பிரசன்னத்தை உணர்த்துகிறது. இருளின் ஆட்சி ஒழிந்தது. ஒளியின் ஆட்சியும் அதனால் உருவான அமைதி, மகிழ்ச்சி, மீட்பு, எதிர்நோக்கு ஆகியவை பிறந்து விட்டதையும் குறிக்கிறது.

மத்திய காலத்திலிருந்துதான் கிறிஸ்துவின் பிறந்த நாள் கொண்டாட்டத்தை ஒரு சிறப்புத் திருப்பலி மூலம் நள்ளிரவில் நிறைவேற்றும் வழக்கம் ஆரம்பித்தது. நள்ளிரவில் திருப்பலி நடத்துவது... என்பது அப்போது இந்நாளில் மட்டுமே அனுமதிக்கப்பட்டது. நாளடைவில் பழைய ஆங்கில மொழி வழக்கில் "கிறிஸ்துவின் மாஸ்" என்று அழைக்கப் பட்டது. அதாவது, "மாஸ்" என்பது "திருப்பலி" ஆகும். அதிலிருந்து மருவி உருவானதே கிறிஸ்மஸ்!

## கிறிஸ்மஸ் விழாவை நாம் எவ்வாறு அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாடுவது?

- வெளி ஆடம்பரங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதை நிறுத்தி கிறிஸ்மஸ் சுட்டிக் காட்டும் மதிப்பீடுகளை வாழ்வாக்குவதற்கு முக்கியத்துவம் அளிப்போம்.
- இறைவனில் நாம் கொண்டிருக்கின்ற உறவை புதுப்பிக்க வேண்டும். இறைவன்மீதுள்ள நம்பிக்கை, அன்பு, எதிர்நோக்கு ஆகியவற்றை அதிகமாக்க வேண்டும்.
- இருளின் ஆட்சிக்குரிய பாவ செயல்களை கலைந்துவிட்டு ஒளியின் ஆட்சிக்குரிய புண்ணியங்களை அனுசரித்தல் வேண்டும் (உரோ. 13:12).
- இறைமகன் இயேசுவின் பிரசன்னத்தை நாம் உலகிற்கு உணர்த்த மறு கிறிஸ்துவாக நாம் உருவாக வேண்டும். நம்மில் இருக்கின்ற ஏழை எளியவரில், அனாதைகளை, கைவிடப்பட்டோர், நோயுற்றோர், துன்புறுவோர், வறியோர் ஆகியவர்களில் இயேசுக்களை கண்டுக்கொள்ள வேண்டும் (மத். 25: 35, 40).
- இயேசு தனது மனுவுருவின் மூலமாக எவ்வாறு தன்னையே தியாகமாக்கி பகிர்ந்துக் கொண்டாரோ அதுபோல நாமும் நமது சுயநல எண்ணங்களை மறந்து பிற நல எண்ணமுடன் நம்மிடம் உள்ளவற்றை இல்லாதவரோடு பகிர வேண்டும் (உரோ. 12:13)
- நாம் அனைவரும் விழிப்பாயிருந்து ஆயத்தமுடன் இருக்க வேண்டும். காலம் தாழ்த்தாமல் நம்மிலே நாம் காண வேண்டிய மாற்றங்கள் என்ன என்பதை இனங் கண்டு கொண்டு மாற்றத்திற்கான வழியை தேட வேண்டும் (மத். 24: 42,44).

- ❖ சோதனைக்கு உட்படாதபடி விழித்திருந்து செபிக்க வேண்டும் (மாற்கு 14:38).
- ❖ இயேசுவின் மீட்புப் பணியில் பங்கெடுக்கும் வண்ணம் அவர் துணையுடன் நீதி, அமைதி, ஒற்றுமை, மன்னிப்பு, ஒப்புறவு, அன்பு ஆகிய இறையரசின் மதிப்பீடுகளை நிலைநாட்ட பாடு பட வேண்டும்.
- ❖ ஆண்டவர் இயேசு கிறிஸ்து வெளிப்படுத்துவதற்காக காத்திருக்கும் நாம் குறைச் சொல்லுக்கு ஆளாகக் கூடாது. அருள்நிலையை இழக்காமல் இருக்க வேண்டும். நம்பிக்கைக்குரிய பணியாளராக இருக்க வேண்டும். இறை இயேசுவை நம்புறவில் நாளுக்கு நாள் வளர வேண்டும். (1கொரிந்தியர் 1:7–9)
- ❖ புதிய வானமும் வையமும் மலர நாம் பாடுபட வேண்டும் (வத்திக்கான் சங்க ஏடு: இன்றைய உலகில் திருச்பை எண். 39)
- ❖ நமது நேரம், சக்தி, திறமைகள், உழைப்பு, வாழ்க்கை ஆகியவற்றை பிறரோடு பகிர வேண்டும். உண்மையான பாசம் பரிவிரக்கம் கொண்டு ஒருவர் மற்றொவருக்கு துணையாக உடனிருக்க வேண்டும்.
- ❖ குடும்ப உறவுகளுக்கு முக்கியத்துவம் அளித்து கட்டிக் காக்க வேண்டும்.
- ❖ கிறிஸ்துவை மையப்படுத்திய உறவில் வளர்ந்து எல்லோரையும் அன்பு செய்தல் வேண்டும்.
- ❖ ஆண்டவர் இயேசு கிறிஸ்து வெளிப்படுத்துவதற்காக காத்திருக்கும் நாம் குறைச் சொல்லுக்கு ஆளாகக் கூடாது. அருள்நிலையை இழக்காமல் இருக்க வேண்டும். நம்பிக்கைக்குரிய பணியாளராக இருக்க வேண்டும். இறை இயேசுவை நம்புறவில் நாளுக்கு நாள் வளர வேண்டும் (1கொரி. 1:7–9).
- ❖ புதிய வானமும் வையமும் மலர நாம் பாடுபட வேண்டும் (வத்திக்கான் சங்க ஏடு: இன்றைய உலகில் திருச்பை எண். 39).
- ❖ நமது நேரம், சக்தி, திறமைகள், உழைப்பு, வாழ்க்கை ஆகியவற்றை பிறரோடு பகிர வேண்டும். உண்மையான பாசம் பரிவிரக்கம் கொண்டு ஒருவர் மற்றொவருக்கு துணையாக உடனிருக்க வேண்டும்.

## வித்தியாசமான கிறிஸ்மஸ் விழாவாக்கிட...

இந்தக் கிறிஸ்துமஸ் நமது வாழ்வில் வித்தியாசமான ஒரு புதுமையை உருவாக்கட்டும். இயேசு பிறப்பு விழாவாக மாற வேண்டுமெனில், கிறிஸ்துமஸ் காலங்களில் சுட்டிக் காட்டப்படும் அனைத்து குறியீட்டுருச் சின்னங்களும், இன்றைய சமூகப் பொருளாதார, அரசியல், கலாச்சார, சமய சித்தாந்தச் சூழலில் நமக்கு என்ன பாடங்களைக் கற்றுத்தருகின்றன என்பதைப் புரிந்து தொகுத்து அறிவது தேவையாகின்றது.

1. கிறிஸ்துமஸ் குடிலானது ஓர் அலங்கார விளையாட்டு அல்ல, செலவு செய்து, ஜோடனை செய்து, ஆடம்பர, பகட்டாகச் செய்யும்போது, கிறிஸ்துமஸ் தொழுவக் காட்சிக்கே துரோகம் இழைத்ததாகும். அதிலும் "குடில் போட்டி" என அறிவித்து, அதிக செலவீனங்களையும், அளவுக்கு மீறிய–அதுவும்–அருவருக்கக்கூடிய ஆடம்பர தோரணங்களையும் எடுத்துக்காட்டிடும்போது, "கிறிஸ்துமஸில் கிறிஸ்து மிஸ்ஸிங்...!
2. இன்னமும் முற்போக்காக இப்படிச் செய்யலாம், இந்த ஆண்டு, "குடில் வேண்டாம், குடிசை செல்வோம்". அப்படியென்றால் விளிம்பில் இருக்கும் குடும்பங்களைச் சந்தித்து கிறிஸ்துமஸ் கொண்டாடுவது.

3. கிறிஸ்துமஸ் தாத்தாவின் உருமல்ல, அக்குறியீடு சுட்டிக்காட்டும் பொருளாதாரப் பகிர்வு மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாம். ஒன்றுமில்லாதவர்களுக்கும் ஏழையருக்கும் நம்மால் இயன்றதை இன்முகத்துடன் பகிர்ந்து வாழ்வதே அது தரும் அறைகூவல். இந்த ஆண்டு கிறிஸ்துமஸிற்கு, நாம் புத்தாடைகளை அணிவதற்குப் பதிலாக, அதே புத்தாடைகளை மற்றவருக்கு வழங்குவதாக அமையலாம், அமையட்டும். பழைய, பயன்படுத்திய ஆடைகளை அல்ல, புத்தாடைகளை... அன்பர்கள், நண்பர்கள் அல்ல, விருந்துக்கு... அறியாதவர்கள், அநாதைகள், ஆதரவற்றோருடன் விருந்து...
4. "கிறிஸ்துமஸ் காரல்ஸ்" என்று கிறிஸ்துமஸ் பாடற்குழு, கிறித்தவக் குடும்பங்களை இரவிலே எழுப்பி, தூக்கத்தைக் கெடுத்து, "இயேசு பிறந்தார்...வாரீர்"... என்று ஏற்கெனவே தெரிந்ததைத் தெரியாததைப்போலச் சொல்வது வேண்டாம். இவ்வாண்டு! மாறாக, பொதுமக்களுக்கு (கிறித்தவர்களுக்கு மட்டுமல்ல) வசதியான இடத்தில், வசதியான நேரத்தில் (கிறிஸ்துமஸ் காலத்தில் ஒரு மாலை நேரத்தில்) "சமுதாயப் பாடல்களைப்"பாடி, மக்களின் மகிழ்வைக் கூட்டலாம், விழிப்புணர்வை வளர்க்கலாம். ஏனெனில், அன்றைய தினம் வானதூதர்கள் பாடியதும் இதுவே; இறைவனுக்கு மகிமை எப்போது? நன்மனத்தோர் அமைதி பெறும்போது. அப்படியானால், மக்களை நன்மனத்தோராக மாற்றிடும், மண்ணை வளமுடையதாக மாற்றிடும், சரித்திரத்தைச் சீராக ஏற்றிடும் வண்ணமாக இந்தப் பாடல் நிகழ்வினை அமைக்கலாமே! அநீதி காணும்போது நீதியை நிலைநாட்டிட வருவேன்" என்பது அனைத்து மதங்களின் அடிப்படையான இறைவனின் வெளிப்பாடாக இருக்கும்போது, மத நல்லிணக்கப் பாடல்களைத் தேர்வு செய்து (கிறித்தவப் பாடல்களை மட்டுமல்ல...) மக்களிடையே நல்லுணர்வை வளர்ப்பதாக மாறுவது அவசியமேம.
5. கிறிஸ்துமஸ் என்பது இயற்கையோடு இணைந்து என்றும் வாழும் இறைவனைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது. ஆகவே, விழாவையும் இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் வண்ணம் அமைப்பது சிறப்பே! தனி ஒரு கிறிஸ்துமஸ் மரம் என்று அதனை வெட்டிக்கொண்டு வந்து வீணடிப்பதைவிட, வீட்டின்முன்னே உள்ளே மரத்திற்கு மரியாதை செய்வதும், வாழும் மண்ணுக்கு மதிப்புத் தருவதம் மென்மேலும் பலனும் பயனும் உடையதாக அமையுமே...
6. இறைவன் நம்மோடு என்று பொருள்படும் எம்மானுவேல் – ஏழைக் குழந்தையாக அடையாளங் காணப்பட்டார் என்றால், ஒடுக்கப்பட்டோரின் உரிமை வாழ்வுக்குக் குரல் கொடுப்போம், தோள் கொடுப்போம், இயக்கம் சேருவோம். "அநீதி காணும்போது, தலித்துக்கள், பாட்டாளிகளின் நல் வாழ்விற்காக அவர்களோடு நாம் இருக்கும்போது நாமே எம்மானுவேல்" ஆகின்றோம். அநீதி காணும்போது, இந்த ஆண்டுக் கிறிஸ்துமஸின்போது, அப்படிப்பட்ட இலக்கு மக்களின் இயக்கங்களில் அங்கத்தினராக சேரலாமே.
7. இந்த "இம்மானுவேல்" என்ற சொற்றொடரோடு மிக நெருங்கிய தொடர்புடைய வார்த்தை "கன்னி கருத்தாங்கி" என்பதாம். ஆதிக்கச் சமூகத்தில் எந்தப் பங்கேற்புமின்றி குறிப்பாக ஆண்வழிச் சமூகத்தின் அடிப்படைத் தகவுகளையெல்லாம் முறித்தெறிந்துவிட்டு இறைவன் மனிதரானார். "அநீதி காணும்போது, பெண்களின் பங்கேற்பின்றி கடவுளின் செயல்பாடு முழுமையடைவதில்லை. எனவேதான், இம்மானுவேல் என்று கூறும்பொழுதெல்லாம், ஒடுக்கப்படும் பெண்களோடு தன் பங்கேற்பை ஏற்படுத்திக் கொண்டு இறைவன் நம்மோடு தங்குகிறார் என்பதனைப் புரிந்துக்கொள்வது அவசியமல்லவா?

## கிறிஸ்மஸ் நபர்கள் விடுக்கும் செய்தி

**வானதூதர்:** மெசியா பிறப்பின் மகிழ்ச்சியின் நற்செய்தியை வானதூதர் மக்களுக்கு அறிவித்தார். இறை திருவுளத்திற்கு என்றும் பணிந்து இறைவனுக்கு பணிவிடை செய்யவும் மக்களுக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்ற தூதுவர்களாக வாழவும் வானதூதர்கள் நம்மை அழைக்கிறார்கள்.

**மரியாள்:** கிறிஸ்து பிறப்பின் உண்மையான அர்த்தத்தை மரியன்னை நமக்கு உணர்த்துகிறாள். தாழ்ச்சியின் வழியாக இறைவனை தனது திருவயிற்றில் தாங்கும் பேற்றினை பெற்றாள். நாமும் தாழ்ச்சியான உள்ளமுடன் நம் இதங்களை மாற்ற வேண்டும். அவளது மௌனம் அமைதியின் ஆகியவற்றின் வழியாக இறைச் செய்தியை அறிந்து அதை செயல்படுத்த திருவுளங்கொண்டார். அதுபோல நாமும் நமது உள்ளத்தின் ஆழத்தில் இறைவனது குரலோசையை கேட்டு அவர் நமக்கு விடுக்கும் செய்தியை வாழ்வாக்க வேண்டும். இறைவனது அரும்பெரும் செயல்களை மரியாள் கண்டுக் கொண்டு கடவுளைப் போற்றுகின்றனர். நாமும் நமது வாழ்வில் இறைவனது அருள் வரங்களை எண்ணி நமது நல்வாழ்வின் மூலமாக இறைவனை போற்ற வேண்டும். இறைவனின் அன்னையான நேரத்திலிருந்து அவர் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பியது. நமது உள்ளமும் இறைவன் தரும் மகிழ்ச்சியால் நிரம்ப இறைவன் விடுக்கும் மதிப்பீடுகளை வாழ்வாக்க வேண்டும்.

**சூசை:** இயேசுவின் வளர்ப்புத் தந்தையாக இருக்க அழைக்கப்பட்ட இவர் தமது தியாகம், அன்பு, பொறுமை ஆகியவற்றின் வழியாக தம்மிடம் கொடுக்கப்பட்ட பணியை முழுமையாக நிறைவேற்றி இறைமகன் இயேசுவின் மீட்புப்பணியில் முக்கிய பங்காற்றினார். நாமும் அவரைப் போன்று இறைத்திருவுளத்திற்கு முற்றிலும் பணிந்து நீதிமான்களாகவும் பொறுப்பு மிக்கவர்களாகவும் தியாகமிக்கவர்களாகவும் சாட்சிய வாழ்வை வாழ்ந்து இயேசுவுக்கு ஏற்ற சீடர்களாக வாழ முயலுவோம்.

## வரலாற்றுப் பிண்ணனியும் உள்ளார்ந்த அர்த்தங்களும்

**கிறிஸ்மஸ் குடில்:** 1224–ம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவின்போது புனித பிரான்சிஸ்கு அசிசியார் முதன் முதலாக கிறிஸ்மஸ் குடிலை உருவாக்கினார். ஏழ்மையில் அசௌகரியமான மாட்டுத்தொழுவத்தில் இயேசு பிறந்ததை மக்களுக்கும் திருச்சபைக்கும் விளக்கும் நோக்கமுடன் அதை அமைத்தார். நான்காம் நூற்றாண்டில் துவங்கப்பட்ட கிறிஸ்மஸ் கொண்டாட்டம் காலப்போக்கில் வறட்டு விழாவாகவும், விளம்பர வெளிப்பாடாகவும் மாறியது. ஏழையாக பிறந்த இயேசு ஏழையர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலை வளர ஆரம்பித்தது. திருச்சபையிலும் அத்தகைய சூழல் ஏற்பட்டது. பகட்டான கிறிஸ்மஸ் விழாவை பொருளுள்ள கிறிஸ்மஸ் விழாவாக மாற்றவே நிஜமான கிறிஸ்மஸ் தொழுவக்காட்சிக்கு அழைத்துச் செய்ய விழைந்தார் புனித பிரான்சிஸ்சிஸ்கு அசிசியார்.

**கிறிஸ்மஸ் நட்சத்திரம்:** கிறிஸ்து பிறப்பு விழாவின்போது தொங்கவிடப்படும் நட்சத்திரம் மீட்பு பற்றிய இறை வாக்குறுதியின் விண்ணக அடையாளமாக திகழ்கிறது. மனிதன் பாவம் செய்து இறைவனின் தண்டனைக்கு ஆளான பின்னும் இறைவன் தமது இரக்கத்தினால் தம் மக்களை பாவங்களிலிருந்து மீட்க மீட்பரை அனுப்ப வாக்களித்தார். நட்சத்திரமானது

அந்த வாக்குறுதி நிறைவின் அடையாளமாக திகழ்கிறது. நாமனைவரும் நம்பிக்கையின் நட்சத் திரங்களாக வாழ நட்சத்திரம் நம்மை அழைக்கிறது.

**கிறிஸ்துமஸ் மரம்:** பசுமை மாறாத மரம். கிறிஸ்துமஸ் காலத்தைக் கொண்டாடு வதற்காக, வழக்கமாக விளக்குகளாலும், அணிகலன்களாலும் ஒப்பனை செய்யப்படும் மரம். ப ழுங்கால எகிப்தியர்கள், சீனர்கள் மற்றும் யூதர்களிடையே முடிவற்ற வாழ்வுக்கு அடையாளமாக, பசுமை மாறாத மரங்கள், மலர் வளையங்கள், மாலைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவது பெ ாதுவழக்கமாக இருந்தது. ஆப்பிள்கள் தொங்கும் சொர்க்கலோகமாக மரத்தின் காட்சி இடம்பெ பற்ற, ஆதாம்–ஏவாள் பற்றிய ஜெர்மானிய இடைக்கால நாடகம், இந்த குறியீட்டின் முதல் வெ ளிப்பாடு என்று சொல்லலாம். கிறிஸ்துமஸ் மரத்தை மெழுகுவர்த்திகளோடு முதலில் தொ டங்கி வைத்தவர், 16–ம் நூற்றாண்டுச் சீர்திருத்தவாதி மார்ட்டின் லூத்தர். ஊசியிலை மரவகைகள் தேர்வு செய்வதற்கான காரணம், சாதாரணமாக (மற்ற மரங்களைவிட) அ னைத்துக் காலத்திலும் பசுமையைத் தாங்கியிருப்பதால்.

**கிறிஸ்துமஸ் தாத்தா:** கிறிஸ்துமஸ் தாத்தா எனப்படும் புனித நிக்கோலா ஸ், துருக்கியில் 4–ம் நூற்றாண்டில் பிறந்தவர். இளம் வயதிலேயே ஏழைகளுக்கு உதவி செய்யும் பரிவு கொணடவர். மீரா பட்டணத்து ஆயரான பின்னர் நிக்கோலாஸ் வறுமை யினாலும், ஏழ்மையினாலும் மிகவும் வாடுவோர் யார் யார் என்று கண்டு, இரவு நேரங்க ளிலே அவர்களின் இல்லங்களில் ஓர் உறையைப் போட்டுவிட்டு யாருக்கும் தெரியாமல் சென்றுவிடுவார். மறுநாள் அவ்வில்லங் களுக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை ல. இதே சம்பவம் பல நாட்கள் நடந்தது. இவ்வாறு, தங்களுக்கு மறைவாக உதவி செ ய்பவர் தங்கள் ஆயர் நிக்கோலாஸ் தான் என்பதனை மக்கள் அறிந்து கொண்டனர். ஆயர் நிக்கோலாஸ் இறந்த பிறகு, அவர் நினைவாக ஏழைகளுக்கும் சிறார்களுக்கும் பரிசுகளை வழங்கினார். இதுவே நாளடைவில் கிறிஸ்துமஸ் தினத்தன்று கிறிஸ்துமஸ் தாத்தா பரிசு வழங்கும் பழக்கமாக மாறியது. எனினும், நிக்கோலாசை “சாந்தா கிளாஸ்” என்ற நிலைக்குக் கொண்டு வந்த பெருமை டச்சுக்காரர்களைச் சேரும். 16–ம் நூற்றா ண்டில் டச்சு சிறார்கள், கிறிஸ்துமஸ் விழாக் காலத்தில் தங்கள் மரக்காலணிகள் பரிசுப் பொருட்களால் நிரம்பும் என்ற நம்பிக்கையில், அவற்றை தத்தம் இல்லங்களுக்கு வெ ளியே வைத்தனர். அதேபோல் காலணிகளும் நிரம்பின–உதவும் நெஞ்சங்களின் கருணை ணயினால். ஒரு குண்டான, விகடங்கள் நிறைந்த சிகப்புத்தொப்பியுடன் கிறிஸ்துமஸ் த ாத்தாவை உருவகித்தவர் 19–ம் நூற்றாண்டைச் சார்ந்த கிளமெண்ட் மோர் என்பவர்.

**கேரல் பாடல்கள்** (கிறிஸ்து பிறப்பு பாடல்கள்): ஒரு விழாக்காலத்துடன், குறிப்பா க கிறிஸ்துமஸ் விழாவுடன் தொடர்புடைய, மதத் தன்மையுடனான மகிழ்ச்சி நிரம்பிய மிகப் பிர பலமான பாடல், பல்லவி அல்லது கூட்டிசை அடிக்கடி இடம் பெறுவதான கவிதைகளைக் கொ ண்டிருக்கும். ஆங்கிலம் அல்லது இலத்தீன் அல்லது இரண்டிலுமான கவிதைகள், நாட்டியம் ம ற்றும் ஊர்வலங்களுடன் தொடர்பு கொண்டவையாக, இடைக்காலத்து இங்கிலாந்தில் தோன்றி ன. திருவருகைக்காலத்தில் பல பங்கு தளங்களில் வீடு வீடாகச் சென்று பாடப்படும் மகிழ்ச்சி யின் கீதங்களான கிறிஸ்து பிறப்பு பாடல்கள் கிறிஸ்துவின் வருகைக்காக மக்களைத் தயாரிப் பதையும் கிறிஸ்து பிறப்பின் செய்தியை குடும்பங்களில் உள்ளவர்களுக்கு அறிவிப்பதையும் கு றிக்கும். இல்லாதவரோடு உள்ளதை பகிர்ந்து கொள்ளுகின்ற பகிரும் மனநிலையை உருவாக் கும் எண்ணமுடன் கேரல் நிகழ்ச்சியில் காணிக்கைகள் பெறப்பட்டு ஏழைகளுக்கு கொடுக்கப் படுகிறது.

**கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள்:** ஹென்றி கோல் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறிஸ்துமஸ் சமயத்தில், தமது நண்பர்களுக்கு வரலாற்றின் சில சிறு குறிப்புகளை அனுப்பி வந்தார். அவையே வாழ்த்துச் செய்தியாக அமையலாயின. 1843ஆம் ஆண்டின்போது, அப்படி எழுத முடியாத அளவுக்கு அவருக்கு வேலை பளு இருந்ததால், தனது நண்பரும் ஓவியருமான ஜான் ஹார்ஸ்லி என்பரைக் கொண்டு வாழ்த்து அட்டைகளை உருவாக்கி அச்சிட்டுத் தரும்படி கேட்டுக் கொண்டார். அந்த அட்டைகள் வார்த்தை ஜாலங்களாக அமையாது, வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் செய்திகளின் தூதுகளாக அமைய வேண்டும்.

## *<u>பிறப்பு சொல்லும் செய்தி -</u>* மறைத்திரு அமிர்தராச சுந்தர் ஜா

### முன்னுரை:

பிறப்பு ஒரு அற்புதம். அந்த பிறப்பு ஒரு வரப்பிரசாதம். இந்த பிறப்பு சொல்லுவதோ ஒரு நற்செய்தி. அந்த நற்செய்தி யாருக்கு மகிழ்வு என்பதுவே இன்றைய காலத்தில் மனிதர்கள் கேட்கும் கேள்வி.
மனித பிறப்பு மற்றப் பிற பிறப்பைப் போலத் தானா? என்றால் கட்டாயம் இல்லையென்ற சொல்லத் தோன்றும்.
அப்படியென்ன சிறப்பு மனிதப் பிறப்பு. அது சொல்லும் செய்தித்தான் என்ன?

### சிறப்பானதே பிறப்பு:

பிறப்பு இந்த பிரபஞ்சத்தில் பலவுண்டு. படைப்பிலேயே பார்க்கின்றோம், புல்பூண்டுகள், மரம் செடி கொடிகள், நடப்பன, ஊர்வன என பலவுண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாளிலே படைக்கப்பட்டதாக விவிலியம் சொல்லுகின்றது. முத்தாய்ப்பாய் மனிதப் பிறப்பு. அதன் பின்னர் எதுவும் படைக்கவில்லை. அந்த மனிதனை வனைந்து தன் சாயலிலே வனப்பிலே படைத்து, தன்னுடைய உயிர்மூச்சை அதனுள் ஊத உயிர் பெற்றான் மனிதன் என்பதுவே செய்தி. இதுவே மனித படைப்பின் சிறப்பாகும்.

### ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதம்:

மனிதர்கள் தொடர்ந்து பிறந்து கொண்டே இருக்கிறார்கள். அன்று படைத்தவர் தன் படைப்பு தொழிலை நிறுத்திக் கொள்வதில்லை. இன்று தகுதியற்ற, பலவீனமான மனிதர்களையே பயன்படுத்தி

தொடர்ந்து படைத்துக் கொண்டே இருக்கின்றார். எனவே தான் அறிஞர் சொன்னார், ஒவ்வொரு குழந்தையும் இந்த மண்ணிலே பிறக்கும் போதெல்லாம், கடவுள் இன்றும் உயிர் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றார். படைத்துக் கொண்டேயிருக்கின்றார் என்பது உண்மையாகின்றது. எந்த மனிதரும் ஒருவரைப் போல ஒருவர் இல்லை. விஞ்ஞானமும் சொல்லுகின்றது, கைரேகை மாறுகின்றது. நடை மாறுகின்றது. சாயல் மாறுகின்றது. இத்தனையாண்டளவாக படைக்கபட்ட மனிதர்களில் இருவர் கூட ஒன்று போல இருந்ததாக வரலாறு இல்லை. உலகத்தில் ஏழு பேர் ஒன்றாக இருப்பதாக பேசிக் கொள்கிறார்களே தவிர நிரூபித்ததில்லை. மனிதர்களுள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதத்தில் வேறுபட்டே இருக்கின்றார்கள். இதுவே படைப்பின் சிறப்பாக உன்னமாக அமைந்துள்ளது.

**இந்த பிறப்பு நமக்கு கொடையே:**

மனிதர்கள் தங்களது உறவிலே தங்களுக்கு ஒரு குழந்தை வேண்டும் என்று நாடத கோவில் இல்லை, தேடாத மருத்துவரும் இல்லை. கோவில்கள் மருத்துவர்கள் தங்களது விளம்பரங்களை கூட இந்த கோயில் குழந்தைவரம் கொடுக்கும் அற்புத திருக்கோயில் என்றும், மருத்துவர்கள் தாங்கள் கைராசிக்காரர்கள் என்றும் சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகின்றார்கள்.

விவிலியம் கூறுகின்றது. திருப்பா 127 : 03 'வயிற்றின் கனி ஆண்டவர் தந்த கொடை, பிள்ளைப் பேறு ஆண்டவர் அருளும் செல்வம் என்கின்றார் தாவீது இராசா. மக்கட் செல்வத்தால் பூமியை நிரப்பி வருகின்றார்.

'மானிடராய் பிறப்பதற்கே நல் மாதவம் செய்திடல் வேண்டும்' என்றான் நம் கவிஞன்.

**இயேசுவின் பிறப்பு**

மானிட சமூகத்தின் வரலாற்றினிலே தன் படைப்புக்களை பாதுகாக்க, வழிநடத்த தேவையானவர்களை அவர்கள் மத்தியிலே தேர்வு செய்து அனுப்பினார் கடவுள். மீட்பின் வரலாறு இதனை உறுதி செய்கின்றது.

அவர்களையெல்லம் புறந்தள்ளிய மானுடம், தன்மகனை மதிக்கும் என எண்ணி தன்மகனை தரணிக்கு தரைவாக்க முன்வந்தார்.
யோ 03: 16 கூறுகின்றது, 'நம்பிக்கைக் கொள்வோர் நிலைவாழ்வு பெற, தன் மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மீது அன்புகூர்ந்தார்.'
மகனின் பிறப்பிற்கு இதுவே காரணமாகியது. தன்மகனை மானுடம் மதிக்கும் தன்னை மாற்றிக் கொள்ளும் என நம்பினார் படைத்தவர்.

**நோக்கம் நிறைவேறியதா?**

பிறந்தவரும் தான் கடவுளின் குமாரர் என்றல்லாமல் தன்னையே தாழ்த்திக் கொண்டார். எளிமையான வாழ்வின் வழி இம்மண்ணுலகில்ஒரு புதிய புரட்சியை உருவாக்கினார். தன்போதனையின் வழியாக எளிமையான உவமையின் வழியாக ஆழமான கருத்துக்களை விதைத்தார். மானுடம் விட்டா வைக்கும். நான் நல்லவனாக இருப்பதால் உனக்கு பொறாமையா? என்று கேட்டுப் பார்க்க அழைக்கிறார். நீரும் போய் அப்படியே செய்யும். இரக்கத்தையே விரும்புகின்றேன் என்பதன் அர்த்தத்தை போய் கற்றுக் கொள்ளுங்கள் என அறிவுறுத்துகின்றார். மானுடத்திற்காய் தன் மகனையே அளிக்க வந்த கடவுள் சாவையே ஏற்றுக் கொள்ள பணிக்கின்றார். போதனையை ஏற்றுக் கொள்ள முடியாத மானிடம் கொல்ல தீர்மானித்தது. யார் பெரியவர் என்கின்ற போட்டியாலேயே அவரை கொல்ல தீர்மானித்தது. அதை சாத்தியப்படுத்தியது. அதனால் மானுடத்தின் நோக்கம் நிறைவேறியதா? கடவுளின் நோக்கம் நிறைவேறியதா?

**பிறப்பு சொல்லும் செய்தி:**

ஒவ்வொரு மனிதனின் பிறப்பும் முன்கூறிக்கப்பட்ட ஒன்றாகும். இதனை பவுல் விளக்குகிறார் எபே 02: 10 'நாம் கடவுளின் கைவேலைப்பாடு. நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாக படைக்கப்பட்டிருக்கின்றோம். இவ்வாறு நற்செயல்கள் புரிந்து வாழும்படி கடவுள் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கின்றார்.' இறைவனின் இறையாட்சிப் பணியினை, அவர் விட்டுச் சென்ற பணியினை தொடர்ந்தாற்ற, தன் மக்களை இறைவன் முன்கூறித்து

வைத்து தேர்ந்தெடுத்து, ஆசீர்வதித்து வருகின்றார். ஒவ்வொரு குழந்தையும் இந்த மண்ணுலகில் பிறக்கும் போது, இறைவன் செயலாற்றிக் கொண்டு இருக்கின்றார். நான் தான் உங்களை தேர்ந்து கொண்டேன் என்கின்றார். பிறப்பு நமக்கு விடுக்கும் செய்தி. நாம் நமக்காக அல்ல, மாறாக மற்றவர்களின் நலன்களுக்காக. நம்முடைய ஆற்றலை திறமையை, அறிவை கொண்டு இறைப்பணியாற்றிடவே. அவர் விட்டுச் சென்ற நல்ல செயல்களை மண்ணுலக மாந்தர்கள் பெற்றிடவே. மாந்தர்கள் யாவரும் நம்முடைய நல்ல செயல்களை கண்டு படைத்தவரையும், பராமரிப்பவரையும், பாதுகாப்பவரையும் கண்டு போற்றிடவே. மத் 05: 16

**நம்முடைய பிறப்பு அர்த்தம் கண்டதா?**

மிகுந்த கனி தந்து அவருடைய சீடராக வாழ்வதுவே தந்தைக்கு மாட்சிமையளிக்க கூடியது. இந்த கனி தரும் வாழ்வு நமதாகும் போதே நம்முடையவாழ்வு அர்த்தம் பெறுகின்றது. இன்றைய வாழ்வு சூழலில் நம்முடைய கிறிஸ்தவ வாழ்வு பணம் பதவி சாதி என்ற சாபக் கேட்டுக்குள் சிக்கித் தவிக்கின்றது. இதிலே மிகுந்த எண்ணிக்கையிலே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் சுழன்று வருவதால் சாட்சியமான வாழ்வு என்பது பெரிய கேள்விக் குறியாகிப் போனது. இதனால் இன்று பிறப்புச் கூட அர்த்தம் இழந்து போனதோ என்று கேட்கத் தோன்றுகின்றது. நல்லது செய்து வாழும் வாழ்வு என்பது போய், இன்று நான் ஏன் செய்ய வேண்டும், எனக்கு என்ன லாபம் கிடைக்கும், பதவி சுகம் கண்டு, பணத்தினை சேர்த்து, ஊதாரியாக வாழ்ந்து எதிர் சாட்சியாக வாழ்வது தான் இன்றைய வாழ்வாக மாறி வருவது வேதனையையே தருகின்றது. பவுல் அடிகளார் கலாத்திய மக்களுக்கு விடுக்கும் எச்சரிக்கையை ஏற்றுக் கொள்வோம். 05: 15 'ஒருவரை ஒருவர் கடித்து விழுங்குவதை நிறுத்தாவிட்டால் ஒருவரால் ஒருவர் அழிக்கப்படுவீர்கள். எச்சரிக்கை!'

**முடிவுரை:**

வாழ்வது ஒருமுறையே. அந்த வாழ்வு ஒரு கொடையே. அந்த கொடையை அர்த்தமுள்ளதாக்க வாழ்வது நமது கடமையே. வாழ்வின்

அர்த்தத்தை புரிந்து, நல்லது செய்து வாழும் போது, படைத்தவருக்கு சான்று பகர்கின்றோம். இதனையே கிறிஸ்து தன் பிறப்பினால், நல்லது செய்து அதுவே தன் வாழ்வின் உணவு என்று சொல்லி வாழ்ந்து அர்த்தம் கொடுத்தார். அதனால் கொலை செய்யப்பட்ட அவர் வாழ்வின் நோக்கம் நிறைவேறியது என்பதுவே உண்மை. தோல்வியல்ல, வெற்றியே.